[29th October 1962

Panchayats

* 868 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to convert the Dharmapuri and Krishnagiri Panchayats in North Salem district into municipalities; and

(*b*) if so, from when?

THE HON. SRI S. M. A. MAJID: (*a*) & (*b*) There was a proposal to convert Dharmapuri Panchayat into a municipality. But it has been deferred for the present.

There is no proposal to convert Krishnagiri Panchayat into a municipality.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: *தர்மபுரி எப்பொழுது முனிசி பாலிட்டியாக மாற்றப்படும் என்பதை அறியலாமா?*

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: *அது இப்பொழுது பரிசீலனை யில் இருக்கிறது. பின்பு தான் அதைப் பற்றி முடிவு எடுக்கப்படும்.*

* *869* **கேள்வி.—திரு. எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி:** *கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) விருதாசலம் மேஜர் பஞ்சாயத்தை நகரசபையாக மாற்ற உத்தேசமுண்டா?

(இ) அப்படியானால், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப் படும்?

THE HON. SRI S. M. A. MAJID: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: *அரசாங்கத்தின் கொள்கையாக ரூபாய் ஒரு லட்சம் வருமானம் வரக்கூடிய மேஜர் பஞ்சாயத் துக்களையும், 20,000-க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள பஞ்சா யத்துக்களையும் முனிசிபாலிடிகளாக மாற்றப் போகிறோம் என்று ஏற்கனவே சர்க்கார் இந்தச் சபையில் அறிவித்திருக் கிறார்கள். இப்பொழுது நகரசபைத் தேர்தல்களை ஒத்தி வைக்கிற காரணத்தினாலே, இந்த மாதிரிப் பஞ்சாயத்துகளை முனிசிபாலிடி களாக மாற்றி, ஒரே சமயத்தில் தேர்தலை நடத்த அரசாங்கம் முன்வருமா?*

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: *இது சம்பந்தமாக மக்களிட மிருந்தும், பஞ்சாயத்துகளிடமிருந்தும் எந்தவிதமான கோரிக்கை யும் வரவில்லை. இப்பொழுது இது பரிசீலனையில் இல்லை.*